# மகாத்மா காந்தியின் பொன்மொழிகள்

- அன்பு என்பது ஒருபோதும் கேட்பதில்லை; எப்பொழுதுமே கொடுக்கும்.
- மனிதனைப் பிடிக்கும் நோய்களிலெல்லாம் மிக மிகக் கொடியது - மோசமானது அச்சம் எனும் நோய்தான்.
- பெண்களின் நிலை உயரும்போது ஆண்களின் நிலையும் உயரும்; இவ்விருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்துவிடும்.
- உங்கள் எண்ணங்களை ஒருபோதும் ஒளித்து வைக்காதீர்கள். அவற்றை வெளியே சொல்வது கேவலமானது என்றால் அவற்றை எண்ணுவது இன்னும் கேவலமானது.
- புகழுரை ஒன்றே உண்மையான அன்பைக் காட்டிவிடாது. தொண்டின் மூலமே அதை நாம் காட்டலாம். ஆத்ம சுத்தியே உண்மையான தொண்டு செய்வதற்கு முதற்படியாகும். இன்றியமையாத நிபந்தனையும் ஆகும்.

RangaRakes

tamilnavarasam.com

- உலகத்தில் மகத்தான செயல்களைச் சாதித்த பெரியார் அனைவரும் எப்போதும் தனித்து நின்றே போராடி இருக்கிறார்கள்.
- அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களும், துயரங்களும் நீங்கி, உள்ளத்தில் அமைதி உண்டாவதற்கு இறை வணக்கத்தைக் காட்டிலும் சிறந்த கருவி வேறு இல்லை.
- நமது பெண்களை நாம் நமது அன்னையாக, சகோதரியாக, மகளாக மதிப்பதற்குக் கற்றுக் கொள்ளாவிட்டால், புத்துயிர் பெற்ற இந்தியாவை உருவாக்க முடியாது.
- நாகரிகம் என்பது வாழ்க்கையின் தேவைகளை அதிகரித்துக் கொண்டே போவது அல்ல; தாமாகத் தேவைகளைக் குறைத்து, உழைத்து வாழ்வதே உயரிய நாகரிகமாகும்.
- ஞானியானவன் துயரங்களைக் காண்பான். ஆனால் அவற்றைக் கண்டு கலக்கம் அடையமாட்டான். துயரத்துக்கு மருந்து என்ன என்பதைச் சொல்வான்.
- மற்றவர்களுடைய குறைகளை யாருமே காண்பார்கள். தன்னுடைய குற்றம் குறைகளை ஒருவன் கண்டுகொள்வது அரிது. அதற்கு வேண்டிய ஞானம் எளிதில் கிடைக்காது. அந்த அறிவைப் பெற்றிருப்பதே என்னுடைய பாக்கியம்.
- பூரண ஞானம் அடைந்தவனுக்குத் துயரம் என்பது இல்லை.



- உன்னுடைய மனைவி உன் நண்பன் என்பதையும், சகபாடி என்பதையும். ஆனால் போர்க்கருவி அல்ல என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்.
- ஆண்டவனை நம்புவோனது உள்ளத்திலிருந்து ஆண்டவன் அச்சத்தை அகற்றிவிடுவான்.
- உண்மையை அறிந்தோ அறியாமலோ மிகைப்படுத்தியும், மறைத்தும், திரித்தும் கூறுவது மனிதனுக்கு இயற்கையாக இருக்கும் ஒரு குறைபாடு. அதனின்று தப்புவதற்கு மௌனம் அவசியமாகிறது.
- நல்ல நண்பனை விரும்பினால் நல்ல நண்பனாக இரு.
- ஒருவன் மெய்ப்பொருளை முழுவதும் கண்டுவிட்டால் அவன் வீடு பெற்றவனே ஆவான்; வாழ்க்கையின் பலனை அடைந்துவிட்டு முக்தி கண்டவன் ஆவான்.
- ஒவ்வொருவனும் தன் நெற்றி வியர்வை சிந்தி உழைத்துப் பிழைத்தால் மண்ணுலகம் சுவர்க்கம் ஆகிவிடும்.
- பட்டினியால் வாடும் மக்களுக்கு எது நன்மையளிக்குமோ, அதுவே எனக்கு அழகானது. முதலில் அவர்கள் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளைக் கொடுப்போம், அதன் பிறகு அழகும், பொருள்களும், கலைப் பொருள்களும் கிடைக்கச் செய்வோம்.
- என்னைப் பொறுத்தமட்டில், முக்திக்கு என்ன வழி என்றால் நமது நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் தொண்டு செய்வதுதான்.

RangaRakes tamilnavarasam.com

- சாதகம் செய்த குரலிலிருந்து நல்ல இசையை எழுப்பும் கலையைப் பலரும் சாதிக்க முடியும். ஆனால், தூய வாழ்வின் இசையிலிருந்து அந்த இசையை எழுப்பும் கலையைச் சாதிப்பது வெகு அரிது.
- எவன் தனக்குத் தானே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ, அவனே சுதந்திர மனிதன்.
- எப்பொழுதும் உண்மையை மறையாது சொல்லுகின்ற மனத் திண்மை வேண்டும். மன அழுக்கு உடல் அழுக்கிலும் ஆபத்தானது. ஆனால், வெளி அழுக்கு உள்ளத்து அழுக்கின் ஓர் அறிகுறியே ஆகும்.
- ஒருவன் தன் குறைகளைக் கண்டுகொண்டுவிட்டால் அதுவே ஒரு பெரும் பாக்கியம்.
- என் அறிவானது குறையும் குற்றமும் கலந்த அறிவு. பூரண அறிவு அல்ல. அதனாலேதான் நான் கண்டதைப் பிறருக்கு உணர்த்தும் சக்தி எனக்குப் போதிய அளவில் இல்லை.
- சுதந்திரமாக வாழ்வது மனிதனின் உரிமை. அதுபோலவே மற்றவர்களைச் சார்ந்து வாழ்வது அவன் கடமை.
- மாணவனுக்குச் சிறந்த பாடப்புத்தகம் அவனுடைய ஆசானே என்பது என் உறுதியான நம்பிக்கை.
- எதிரிகளைக் கொள்வதற்கல்ல, எதிரிகளால் கொல்லப்படச் சித்தமாயிருக்கும் சுதந்திரப் பிரியர்களை உலகில் எந்தச் சக்தியும் தடுக்க முடியாது.
- எந்த அறிவியலும் உண்மையான அறிவியலாக இருக்க வேண்டுமானால், உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் பசிகளைத் தீர்க்க முழு வாய்ப்பு அளிக்க வேண்டும்.



- எக்காலத்துக்கும் பொருந்தும் கொள்கைகள் சில உண்டு. அவற்றில் விட்டுக் கொடுப்பதற்கு இடமில்லை. அவற்றைக் கடைப்பிடிப்பதில் உயிரைக் காணிக்கையாகச் செலுத்தவும் ஒருவர் ஆயத்தமாய் இருக்க வேண்டும்.
- இதயம் எனும் சாணைக் கல்லில் கூரேற்றிய போர்வாளின் முனைபோலக் கூர்மையானது அகிம்சைப் போராட்டம்.
- அகிம்சைக்காக உயிர் துறப்பதைவிட அகிம்சைக்காக உழைப்பது மிகக் கடினம்.
- உண்ணும் உணவுக்கு உழைக்க மனிதனை இறைவன் படைத்தார். உழைக்காமல் உண்பவர்களைத் திருடர்கள் என்றார்.
- கண் பார்வை அற்றவன் குருடன் அல்ல, தன் குற்றங்களை உணராதவன் இருக்கிறானே, அவன்தான் சரியான குருடன்.
- உங்கள் குழந்தைக்கு அமைதியான வாழ்க்கை வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அவர்களுக்கு எப்போதும் கொஞ்சம் பசியும் குளிரும் இருக்கும்படிச் செய்யுங்கள்.
- செயலிலே கெட்டவனைவிட மனத்தில் கெட்டவனே மிகவும் கெட்டவன்.
- குடி என்பது வளர்ந்து கொண்டே வரும் ஒரு சமூகத் தீமை.

RangaRakes tamilnavarasam.com

◆ கல்வி என்பது ஒரு கருவியே தவிர, அதுவே ஒரு குறிக்கோள் அல்ல; நல்ல ஒழுக்கத்தை வளர்ப்பதற்கு உதவி செய்யும் கல்வி முறையைத்தான் உண்மையான கல்வி என்று சொல்ல முடியும்.

◆ நீங்கள் கண்ணியமாக வாழ விரும்பினால் குடிப்பழக்கத் தீமையை விலக்க வேண்டும்!

◆ கஷ்டங்களும், கடின சோதனைகளுமே ஒருவனை மனிதனாகச் செய்கின்றன. ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அவையே அறிகுறியாகும்.

◆ கோழையாக வாழ்வதைக் காட்டிலும் போராடிச் சாவது எவ்வளவோ மேல்.

◆ தன் மனசாட்சி காட்டும் சிந்தனைகளை மீறிச் செயல்படும் அரசியல் தலைவன், இந்தச் சமுதாயத்திற்குப் பயனற்றவன்.

◆ மனித இனம் அனைத்தும், பிரியாத, பிரிக்க முடியாத கூட்டுக் குடும்பம். நம்மில் ஒவ்வொருவரும் மற்றவர்கள் செய்யும் தவறுகளுக்கும், பொறுப்பானவர் ஆவோம்.

◆ மிருகத்தைப்போல் நடக்கும் மனிதன் மிருகத்தை விடவும் மோசமானவன்.

◆ என்னைப் பொறுத்தமட்டில் முக்திக்கு என்ன வழி என்றால் நமது நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் தொண்டு செய்வதுதான்.

◆ சத்தியம் என்பதற்கு உண்மை பேசுவது என்பது மட்டும் பொருள் அல்ல; சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும் உண்மையாக இருப்பதுதான் சத்தியமாகும்.



◆ பிறருடைய துன்பத்தை தன்னுடையதாக ஏற்றுக்கொள்வதில் எவன் இன்பமடைகிறானோ, அவனே உண்மையான தொண்டன்.

◆ தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத் தக்கது ஒன்று உண்டானால் அது குடி என்ற சாபக்கேடுதான்.

◆ நீங்கள் எதைச் செய்தாலும் சரி; உலகத்திற்கும், உள்ளத்திற்கும் உண்மையாகவே நடந்து கொள்ளுங்கள்.

◆ தீய எண்ணங்கள் உள்ளே நுழையாதபடி மனக்கதவைப் பூட்டும் சாவி மனிதனிடம் இருக்கிறது.

◆ அநுபவம் என்பது ஒரு பெரிய ஆசிரியராகும். அது நமக்குப் பல விஷயங்களைக் கற்றுத் தருகிறது.

◆ மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்ல முறையில் தொழில்படச் செய்வதே அறிவிற்கு உண்மையான வளர்ச்சி என்பது என் கருத்து. அறிவும், உடலும் ஒன்றாக வளர்ச்சியடையும்போது இதயத் தத்துவத்திற்கும் ஒரு விழிப்பு ஏற்பட வேண்டியது அவசியமாகும்.

◆ சத்தியமே என் கடவுள்; அகிம்சையே அதைக் காணும் வழி.

◆ சமூக அநீதி எங்கே நடப்பதாக இருந்தாலும் சரி, அதை எதிர்க்காத யாரும் தீவிரமாக அகிம்சையை அனுசரிப்பவராக இருக்க முடியாது.

RangaRakes tamilnavarasam.com

- நம்மிடம் அன்பாக இருப்பவர்களிடம் மட்டுமே அன்பாக இருப்பது என்பதல்ல. நம்மை வெறுப்பவர்களிடமும் அன்புக் கொள்வது ஒன்றே அகிம்சை.

- உண்மையும், அகிம்சையும் மனித சமூகத்தை விட்டுவிட்டுத் தனியாக உட்கார்ந்துகொண்டு அனுஷ்டிக்க வேண்டிய அறங்களல்ல; அவை மனிதவர்க்கம் தினசரி வாழ்க்கையில் உபயோகிக்க வேண்டிய அறங்களாகும்.

- நம்மிடையே ஆயிரக்கணக்கில் குடிகாரர்கள் இருப்பதைவிட, இந்நாடு ஓட்டாண்டியாய் இருப்பதே எனக்குச் சம்மதம்.

- என்னுடைய எழுத்துக்களை மறந்தால் பரவாயில்லை; என்னுடைய செயல்களை மறவாதீர்; எழுத்துக்களை விட என் செயல், வாழ்க்கை இரண்டையும் பார்த்து அவ்வாறே நடக்கப் பழகுங்கள்.

- முள் நிறைந்த செடியிலேதான் முழு அழகு வாய்ந்த ரோஜா பூக்கிறது; அதுபோலவே சொல்லொணாத் துன்பங்களுக்கிடையிலேதான் உண்மை பூத்து மலர்கிறது.

- மக்கள் சேவையே எனக்கு இறைவன் வழிபாடு. பிறந்த போதா நம்மை மரணம் பிடித்துக் கொண்டுவிட்டது! ஆகவே, இறுதியில் வழிபடுவதைவிட வாழ்வின் ஒவ்வொரு நொடியும் ஒப்பில்லா முதல்வனை நினைத்துருக வேண்டும்.



- மதுப்பழக்கம் ஒருவனுடைய மனிதத் தன்மையை அழித்து அவனை மிருகமாக மாற்றி, மனைவி, தாய், உடன்பிறந்தவர் முதலியவர்களைக் கூடப் பிரித்துணர இயலாதபடி ஆக்குகிறது.

- ஒழுக்கத்தை அடியோடு அழிப்பது குடி.

- தீண்டாமையைத் தாக்குவது உயர்வு தாழ்வு வேற்றுமையைத் தாக்குவதாகும். தீண்டாமை ஒழிந்தால், அதே விநாடியில் சாதி முறை பரிசுத்தமாகிவிடும்.

- கல்வி ஒருவனுடைய அறிவைப் பெருக்கும்; கூர்மையாக்கும். நற்செயல்களைச் செய்யத் தூண்டும்.

- தூய்மையான வழிகளின் மூலம் பெற்ற அதே சுதந்திரத்தை அதே தூய்மையான நேர்மையான வழிகளின் மூலம் காப்பாற்றி வர வேண்டும்.

- சரியான முறையில் வாழ்க்கை நடத்த ஆரம்பித்தோமானால், மூட நம்பிக்கைகளும், பிற குற்றங்களும் தாமாகவே விலகிப் போகும்.

- பொருளாதாரச் சமத்துவம்தான் சுதந்திரத்தின் உயிர்நாடி. முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையே உள்ள நிரந்தரப் பூசலை அகற்றுவதுதான் பொருளாதாரச் சமத்துவத்திற்கான ஒரே வழி.

- உலகில் தீண்டத் தகாதவர் என்று எவருமே இல்லை. ஏனெனில் ஒரே நெருப்பின் ஒளிதான் ஒவ்வொரு வரும். ஆகவே, மனிதப் பிறவியெடுத்தோரெவரையும் தீண்டாதவர் என்று ஒதுக்கி வைப்பது தவறு.

RangaRakes tamilnavarasam.com

- சரியான முறையில் நடந்து கொள்வதே முக்கியம். மனத்திலுள்ள நம்பிக்கைகள் எவ்வாறாயினும் சரி. அவை தாமாகவே சீர்படும்.
- சத்தியம் உண்மை என்று சொல்லிக்கொண்டு அடக்கம் இல்லாமல் போனால், கர்வத்திலும் அகம்பாவத்திலுமே முடியும்.
- அடக்கத்தோடு உண்மையைக் கடைப்பிடித்தால்தான் வாழ்க்கை அழகு பெறும். இல்லாவிடில் நல்ல சித்திரத்துக்கும், குறும்புக் கோணல் சித்திரத்துக்கும் உள்ள பேதத்தைப் போலவே ஆகும்.
- மெய்ப்பொருளைக் காண வேண்டுமானால் தன் உயிரைப் போலவே பிற உயிர்களைக் காண வேண்டும்.
- வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் முதலியவற்றைப் பயின்றாலும், பயிலாவிட்டாலும் எனக்குக் கவலையில்லை. முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும். அதுதான் என் விருப்பம்.
- நம் உயிரில் நலம் வைத்துக் கொண்டிருக்கும் பற்று, பிற உயிர்களிடம் ஜீவகாருண்யமாகப் பரிமளிக்க வேண்டும்.
- பிறர் நம்மை எவ்வண்ணம் நடத்த வேண்டும் என்று விரும்புகிறோமோ அவ்வண்ணமே பிறரை நாமும் நடத்த வேண்டும்.
- நான் என்கிற அகந்தையை ஒழிப்பது; மிகமிகப் பணிவோடு நடந்து கொள்வது; அதிகமான பொறுமை காட்டுவது; தெளிவான நம்பிக்கையோடிருப்பது - இந்தக் குணங்களெல்லாம் உடையதுதான் சத்தியாக்கிரகம் ஆகும்.



- தூய்மையான வழிகளின் மூலம் பெற்ற அதே சுதந்திரத்தை, அதே தூய்மையான, நேர்மையான வழிகளின் மூலம் காப்பாற்றி வரவேண்டும்.
- நம்மைவிடச் சிலர் தாழ்ந்தவர்களென்று நாம் கருதுவது நம்மிடையே தீமை மிகுதியாக இருக்கிறதென்பதைக் காட்டுகிறது. இந்தத் தீமையை நாம் ஒழிக்காவிட்டால் அது நம்மை ஒழித்துவிடும்.
- நம் தவறுகளுக்காக நாம் வருந்துவதற்கும் இன்றைய நிலையைவிட மேலான பரிசுத்தமான நிலையை அடைய விரும்புவதற்கும் சின்னமாக விளங்குகிறது பிரார்த்தனை.
- ஏக்கம், ஏமாற்றம், அதைரியம், அச்சம், கர்வம், கோபம் எதுவுமே மாணவர்கள் அகராதியில் இருக்கக் கூடாது.
- மன அமைதி - பிரார்த்தனையினாலேயே உண்டாகும். அமைதி ஒன்றின் மூலமே ஒருவன் பிறருக்கு உதவ முடியும்.
- பெண்ணின் உண்மையான அணி, அவளது புனிதமான ஒழுக்கமே ஆகும். உலோகமும், கல்லும் உண்மையான அணிகலன்கள் அல்ல.
- மாணவர்களின் அறிவைக் கூர்மைப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களுடைய இதயங்களை ஆசிரியர்கள் பண்படுத்தி விடட்டும். ஏமாற்றம், ஏக்கம் என்ற

RangaRakes tamilnavarasam.com

இரண்டு வார்த்தைகளையும் அகராதியில் இருந்து துடைத்துவிட மாணவர்களுக்கு ஆசிரியர்கள் உதவி புரியட்டும்.

- தீண்டாமை என்பது இந்து மதத்தின் ஓர் அம்சமல்ல, களங்கம்.
- பள்ளிக்கூடப் படிப்பு இருக்கும் வரையில் மாணவன். அது முடிந்துவிட்டபின் மாணவன் அல்லன் என்று எண்ணுவது சரியன்று.
- நட்பு என்பது உடன்படிக்கையன்று; கைம்மாறு வேண்டாத ஓர் உறவேயாகும்.
- பணம் செலவழிப்பதை எல்லாம் எழுதி வை; செலவழித்தது அவசியந்தானா என்று சிந்தித்துப் பார். சிக்கனம் தானாக வந்துவிடும்.
- ஆண்டுகள் செல்லச் செல்ல ஒவ்வொருவரும் முதுமைப் பருவம் அடைகின்றனர். ஆனால் ஆசை மட்டும் எப்போதும் இளமையாய் இருக்கின்றது.
- உங்கள் திறமையைப் புலப்படுத்த நீங்கள் செய்யும் நூறு சொற்பொழிவுகளைவிட உங்கள் நடத்தை ஒன்றே போதுமானது.
- மதியை அறியாதவனும், விதியை அறியாதவனும், வாழ்க்கை நிலையை அறியாதவனும், அறம் செய்யாதவனும், மனத்தை அடக்காதவனும் பெரியோரை வணங்காதவனும் ஆன்மீக நெறிமுறையில் முன்னேற முடியாது.
- குடிப்பது ஒரு கெட்டபழக்கம் என்பதைவிட ஒரு நோய் என்றே அதைச் சொல்ல வேண்டும்.



- தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத் தக்கது ஒன்று உண்டென்றால் அது குடி என்ற சாபக்கேடுதான்.
- நீங்கள் கண்ணியமாக வாழ விரும்பினால் குடிப்பழக்கத்தை விலக்க வேண்டும்.
- நாட்டிலேயே மிகப் பெரிய தொழிற்சாலைகள் பள்ளிகளும், கல்லூரிகளும்தான். இங்குதான் எதிர்கால உலகமே உருவாக்கப்படுகின்றது.
- தீயை அணைக்க நீர் கேட்டால், சாம்பலாகப் போனபின் கொண்டுவரும் நீர் போன்றது தக்க சமயத்தில் செய்யாத உதவி.
- வலிமை என்பது அசைக்க முடியாத மன உறுதியில் இருந்து வருகிறது. மனத்தின் தூய்மை அதிகம் இருந்தால் நமது வலிமையும் அதிகமாக இருக்கும்.
- நாகரிகம் என்கிற சொல்லுக்கு நல்ல நடத்தையென்பது பொருள் ஆகும்.
- அன்பும், சத்தியம் என்கிற வாய்மையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை.
- எந்த அறிவியலும், உண்மையான அறிவியலாக இருக்க வேண்டுமென்றால் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் பசிகளைத் தீர்க்க முழு வாய்ப்பளிக்க வேண்டும்.
- எதிரிகளைக் கொல்வதற்கல்ல, எதிரிகளால் கொல்லப்படச் சித்தமாயிருக்கும் சுதந்திரப் பிரியர்களை உலகில் எந்தச் சக்தியும் தடுக்க முடியாது.

RangaRakes tamilnavarasam.com

- உழைப்பின்றி உண்பவர்களைத் திருடர்கள் என்றுதான் கூற வேண்டும்.
- மாணவனுக்குச் சிறந்த பாடப் புத்தகம் அவனுடைய ஆசானே என்பது என் உறுதியான நம்பிக்கை.
- ஒவ்வொருவரும் தன் நெற்றி வியர்வை சிந்தி உழைத்துப் பிழைத்தால் மண்ணுலகம் சுவர்க்கம் ஆகிவிடும்.
- சுதந்திரமாக வாழ்வது மனிதனின் உரிமை. அதுபோலவே மற்வர்களைச் சார்ந்து வாழ்வது அவன் கடமை.
- எல்லா இளைஞர்களுமே சுகமாகவும், சௌகரியமாகவும் தேவை என்பதே இன்னதென்று தெரியாத முறையிலும் வாழ்க்கை நடத்தி வந்தால், சோதனை வரும்போது வெற்றியோடு அதிலிருந்து அவர்களால் மீள முடியாது. தியாகமே ஆனந்தமளிக்கும்.
- சீர்திருத்தவாதியின் பாதை ரோஜா மலர்களால் தூவப்பட்டதல்ல.
- எதிரியை அன்பினால் மட்டுமே வெற்றி கொள்.
- வதந்திகளை பரப்பும் மனிதன் தனக்கும் சமுதாயத்திற்கும் பெருங்கேட்டினை உண்டாக்கு கின்றான்.
- காலம் உறுதியான நண்பனாகவும் இருக்கிறது. அதே சமயம் கருணையற்ற பகைவனாகவும் இருக்கிறது.
- உண்மையான செல்வம் உடல் நலன்தான். மற்ற பொன் வெள்ளி அல்ல.



- அச்சமின்மைதான் ஆன்மீகத்தின் முதல் வேலை.
- தார்மீக விளைவுகளை ஒழுக்கமான கட்டுப்பாட்டால் தான் ஏற்படுத்த முடியும்.
- மனிதர்கள் அனைவரையும் தன் உடன்பிறப்பாகவே கருத வேண்டும்.
- சமுதாயத்தைப் பின்பற்றி மனிதன் அடக்கமாக பணியாற்ற வேண்டும்.
- எக்காலத்துக்கும் பொருந்தும் கொள்கைகள் சில உண்டு. அவற்றில் விட்டுக் கொடுப்பதற்கு இடமில்லை. அவற்றைக் கடைப்பிடிப்பதில் உயிரைக் காணிக்கையாகச் செலுத்தவும் ஒருவர் ஆயத்தமாய் இருக்க வேண்டும்.
- இதயம் எனும் சாணைக்கல்லில் கூரேற்றிய போர்வாளின் முனைபோலக் கூர்மையானது அகிம்சைப் போராட்டம்.
- அகிம்சைக்காக உயிர் துறப்பதைவிட அகிம்சைக்காக உழைப்பது மிகக் கடினம்.
- அகிம்சை சொந்த வாழ்வைச் சார்ந்த நற்பண்பு மட்டுமல்ல, மற்ற நற்பண்புகளைப் போலவே அது போற்றிப் பின்பற்றப்பட வேண்டிய சமுதாய நற்பண்பு.
- பாமர மக்களுக்குச் செய்யும் சுயநலமற்ற சேவையில்தான் அகிம்சை தன்னை வெளிப்படுத்த வேண்டும்.
- வன்முறை ஊடே அகிம்சையின் நியதியைக் கண்டுபிடித்த ரிஷிகள், நியூட்டனைவிட மாபெரும் மேதைகள்.

RangaRakes tamilnavarasam.com

- இந்தியாவிற்குத் தேவையானது ஒரே மாதிரியான நல்ல ஆடை அல்ல; ஒரே மாதிரியான நல்ல இருதயமே.

- உங்கள் எண்ணங்களை ஒருபோதும் ஒளித்து வைக்காதீர்கள். அவற்றை வெளியே சொல்வது கேவலமானது என்றால் அவற்றை எண்ணுவது இன்னும் கேவலமானது.

- மனிதன் என்றால் வெறும் அறிவு மாத்திரமல்ல; அல்லது ஸ்தூல உடலுமல்ல; உணர்ச்சி மட்டுமோ அதுவும் அல்ல; அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்று கூடினால்தான் மனிதன் ஆகிறான். இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்வி முறையாகும்.

- புகழுரை ஒன்றே உண்மையான அன்பைக் காட்டிவிடாது. தொண்டின் மூலமே அதை நாம் காட்டலாம். ஆத்ம சக்தியே உண்மையான தொண்டு செய்வதற்கு முதற்படியாகும். இன்றியமையாத நிபந்தனையும் ஆகும்.

- நிலையான எந்தச் செயலையும் அல்லது உண்மையான எந்தச் செயலையும் சாதிப்பதற்கு முதல் படியாக நமது நெஞ்சத்தில் அஞ்சாமை வேரூன்றி நிற்க வேண்டும்.

- சமய உணர்ச்சி விழிப்படைந்தாலன்றி அஞ்சாமை என்ற நிலையை நாம் அடைய முடியாது; இனி கடவுள் ஒருவருக்கே அஞ்சுவோம். எந்த மனிதனுக்கும் அஞ்சமாட்டோம்.



- அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களும் துயரங்களும் நீங்கி, உள்ளத்தில் அமைதி உண்டாவதற்கு இறை வணக்கத்தைக் காட்டிலும் சிறந்த கருவி வேறு இல்லை.

- நமது பெண்களை நாம் நமது அன்னையாக, சகோதரியாக, மகளாக மதிப்பதற்குக் கற்றுக் கொள்ளாவிட்டால் புத்துயிர் பெற்ற இந்தியாவை உருவாக்க முடியாது.

- எப்பொழுதும் உண்மையை மறையாது சொல்லுகின்ற மனத் திண்மை வேண்டும். மன அழுக்கு உடல் அழுக்கிலும் ஆபத்தானது. ஆனால், வெளி அழுக்கு உள்ளத்து அழுக்கின் ஓர் அறிகுறியேயாகும்.

- உலகத்தில் மகத்தான செயல்களைச் சாதித்த பெரியோர் அனைவரும் எப்போதும் தனித்து நின்றே போராடி இருக்கிறார்கள்.

- எந்தப் பெரிய செயலை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். அதைச் சாதிப்பதற்கு எத்தனை பேர் முன் வருகிறார்கள் என்பது முக்கியமல்ல; எத்தகைய உள்ளப் பண்பு வாய்த்தவர்கள் முன் வருகிறார்கள் என்பதே இறுதியில் வெற்றியை நிர்ணயிக்கும் அம்சமாகும்.

- மரங்களையும், காடுகளையும் புதுப்பிக்கும் நீண்ட நாள் திட்டமொன்று இல்லாவிட்டால் எந்தவிதமான பொது நீக்கத் திட்டமும் பயன்படாது.

- உங்கள் குழந்தைகளுக்கு அமைதியான வாழ்க்கை வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அவர்களுக்கு

RangaRakes tamilnavarasam.com

எப்போதும் கொஞ்சம் பசியும், குளிரும் இருக்கும்படிச் செய்யுங்கள்.

- கண் பார்வை அற்றவன் குருடன் அல்ல; தன் குற்றங்களை உணராதவன் இருக்கிறானே அவன்தான் சரியான குருடன்.
- கடவுளாகிய சத்தியத்தை ஆராய்ச்சி செய்வோர் பல விவரங்களை அனுசரிக்க வேண்டும். உதாரணமாக உண்மையே கூறுவது என்ற விரதம், அகிம்சை விரதம், ஏழ்மை விரதம், உடைமைகளை வைத்துக் கொள்வதில்லை என்ற விரதம் முதலியவற்றை அநுசரிக்க வேண்டும். இவற்றுடன் பிரம்மச்சரிய விரதத்தையும் அநுசரிக்க வேண்டும்.
- எண்ணிக்கை உயர்ந்தால் பலம் அதிகரிக்கிறது என்று எண்ணிக் கோழைகள் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் தீர நெஞ்சு படைத்தவர்களோ போர் புரிவது ஒன்றினிலேயே நம்பிக்கை வைத்து அதிலேயே திளைக்கிறார்கள்.
- கிறிஸ்துவும், முகம்மது நபியும் முதலில் சத்தியத்தை நாடினார்கள். இந்த நோக்கத்தினால்தான் அவர்கள் வாக்கிலே அழகும் இயற்கையாகவே அமைந் திருக்கிறது.
- மனிதனுடைய அடிப்படையான பண்பு நன்மை செய்வதே.
- ஆன்மீக ஞான அநுபவத்துக்குரிய முயற்சியை வாழ்க்கையின் இறுதிக் காலத்துக்கென்று தள்ளி



வைத்திருப்போர் ஒருபோதும் ஆன்மீக ஞானம் அடைவதில்லை.

- ஆன்மாவுக்கும், மூளைக்கும் நல்ல உணவளிப்பது மறை நூல்களும் இலக்கியங்களுமாகும்.
- வாய்ச் சொற்களைக் குறையுங்கள். அதற்காக வாய்மையைக் குறைத்து விடாதீர்கள்.
- இறை வழிபாடு இல்லையென்றால் மனதுக்கு அமைதியும் இல்லை.
- மதம் என்பதன் உட்பொருள் சத்தியமும், அகிம்சையும் தான்.
- சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றாதவனும், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க மறுப்பவனும் ஒரே இனத்தைச் சேர்ந்தவனே.
- மனிதனுடைய அடிப்படையான பண்பு நன்மை செய்வதே.
- மதம் மனிதனை மனிதரோடும், கடவுளோடும் பிணைத்து வைக்கவே உதவ வேண்டும்.
- ஏழைகளுக்கும், தேவைப்பட்டவர்களுக்கும் உதவுவதைவிடப் பெரிய யக்ஞம் என்னதான் உண்டு?
- மறியல் என்பது வன்முறைச் செயலாக இராமல் நன்னெறியைப் புகட்டி மனமாற்றம் செய்வதாக இருக்க வேண்டும்.
- எத்தனை சொற்பொழிவுகளையும், எழுத்தையும் விட செயல்கள்தான் மக்களிடையே மிகவும் சக்தி வாய்ந்த செல்வாக்கை உண்டாக்கும்.

RangaRakes tamilnavarasam.com

- சாவுக்கு நடுவே வாழ்வு நிலைத்திருக்கிறது. பொய்க்கு நடுவே உண்மை நிலைத்திருக்கிறது. இருளுக்கு நடுவே ஒளி நிலைத்திருக்கிறது.
- ஒழுங்கு, தியாக புத்தி, பணிவு, திடசித்தம் ஆகியவை இன்றி உண்மையான முன்னேற்றத்தை அடைய முடியாது.
- உடலை வளர்க்க உணவு வேண்டும்; அப்படியே உயிரை வளர்க்க பிரார்த்தனை வேண்டும். நமது பிரார்த்தனை நம் இதயப் பரிசோதனையாகும். கடவுளின் ஆதரவில்லாவிட்டால் நமக்கு வேறு துணையில்லை.
- தான் கடவுளிடம் கொண்டுள்ள பக்திக்கு எவன் பலன்களைக் கனவிலும் எதிர்பாராதவனோ, அவன் உண்மையான கடவுள் பக்தன்.
- எவனுடைய அறிவு நியாயமாக இல்லையோ, அவன் எளிதில் கோபத்துக்கும், தீய எண்ணங்களுக்கும், இன்னாச் சொற்களுக்கும் இடம் கொடுத்துவிடுவான்.
- ஒரு மனிதனை இன்னொருவனிடமிருந்து பிரிப்பதற்காக மதங்கள் ஏற்படவில்லை. மனிதர்களைச் சேர்த்து வைப்பதுதான் அவற்றின் நோக்கம்.
- சன்மார்க்கம் என்பது உண்மை, அகிம்சை, புலனடக்கம் ஆகிய மூன்றிலும் அடங்கும். மற்ற அறங்கள் எல்லாம் இவற்றுள் அடங்கும்.
- கைம்மாறு கருதாமல் நாமே துன்பத்தை மேற்கொண்டால் நமது அழுகை விண்ணுலகத்துக்கும் எட்டும். கடவுள் அதைக் கேட்டு அருள் புரிவார்.





- ஒரு மனிதனுக்கு அளிக்கக் கூடிய கடுமையான தண்டனை அவனால் புரிந்து கொள்ள இயலாத ஒரு காரியத்தைக் கட்டாயப்படுத்திச் செய்யச் சொல்வதுதான்.
- பிற நாட்டாரைக் கெடுத்து வாழும் தேச பக்தி தேச பக்தியன்று.
- எவன் தனக்குத் தானே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ அவன் சுதந்திர மனிதன்.
- நேர்மைக்குப் பலன் கிடைக்கும். ஆனால் நெடுநாள் காத்திருக்க வேண்டும்.
- உண்மை உறுதியாகக் கடைப்பிடிப்பதிலிருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது. வானமே இடிந்து தலையில் விழுந்தாலும் நாம் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும்.
- அஞ்சாமை என்றால் ஆணவம் என்று அர்த்தமாகாது. ஆணவம் அச்சத்தின் அறிகுறி.
- நன்மைக்கு ஆதரவளித்து வளர்ப்பதை விடத் தீமையை எதிர்த்து முறியடிப்பது. மிகவும் அவசியமான காரியம்.
- மனதில் சாந்தமும், அமைதியும் உள்ளவரே அஞ்சாமல் இருக்க முடியும்.
- ஒன்றுமறியாத ஏழைகளிடம் பொய்சொல்லி ஏமாற்றும் வியாபாரிகளுக்கு விமோசனமே கிடையாது.

- கோபம் பைத்தியத்துக்குச் சமம். அதை வளர்த்தால் நிலைமை மோசமாகி விடும்.
- கவனமாயிருப்பவர்களுக்கே சட்டமும், நியாயமும் உதவி செய்யுமேயொழிய சோம்பேறிகளுக்கு உதவி செய்யாது.
- சுயமரியாதை உள்ளவனுக்கு இரும்பு விலங்கைப் போலவே பொன் விலங்கும் வேதனை செய்யும்.
- மறைத்து வைக்கும் ஆசையே பொய் பேசும்படியும் செய்கிறது. கோழையாகவும் ஆக்குகிறது.
- நம்முடைய நல்ல குணங்களை மட்டும் பிறரிடம் கூறிப் பெருமை கொள்வதைவிடக் கேவலமானது வேறொன்றுமில்லை.
- சுயநலம் கருதும் மனிதன் எங்கு வாய்ப்புக் கிடைக்கிறதோ, அங்குக் கொள்ளையடிப்பான். அவனுக்குத் தன் இனத்தார் பிற இனத்தார் என்ற வேற்றுமை இல்லை.
- பொதுவான ஒரு காரியம், பொதுவான ஒரு குறிக்கோள், பொதுவான துயரங்கள் ஆகியவற்றில் தான் ஒற்றுமை அடங்கியிருக்கிறது.
- தீயன செய்பவனைப் போலவே தீயன சிந்திப்பவனும் தீயவனே.
- நமது தவறுகளுக்கு நாம் வருந்துவதற்கும், இன்றைய நிலையைவிட மேலான பரிசுத்த நிலையை அடைய விரும்புவதற்கும் சின்னமாக விளங்குகிறது பிரார்த்தனை.



- கடவுள் கடவுளாயிருப்பதற்கு நம் இதயத்தையே ஆண்டு, மாற்றுபவராய் இருக்க வேண்டும்.
- சரியான பிரார்த்தனை உருவ வழிபாட்டில் இல்லை. ஆனால் உருவத்தில் கடவுளை வழிபடுவதில்தான் இருக்கிறது.
- உலகத்திலுள்ள எல்லாச் சக்திகளையும் விட ஆன்ம சக்தியே அதிக பலமுள்ளதாகும்.
- ஞானியானவன் யாருக்கும் தீமை எண்ணமாட்டான். பகைவனுக்காகக் கூட கடைசிவரை கடவுளிடம் பிரார்த்தித்துக் கொள்வான்.
- சன்மார்க்கத்தின் வேர் உள்ளத் தூய்மையே யாகும்.
- ஒரு காரியம் நீதி தர்மத்துக்குப் பொருந்தியதா அல்லவா என்பது காரியம் செய்பவனின் நோக்கத்தையே பெரிதும் பொறுத்ததாகும்.
- சாவதைத் தடுக்கும் சட்டம், மனிதனைச் சாகாம லிருக்கச் செய்வதில்லை.
- மனிதனுக்கு மட்டுமே உணர்ச்சியோடு அறிவும் அளிக்கப்பட்டிருக்கிறது. மிருகத்துக்கு உணர்ச்சி மட்டுமே உண்டு.
- மக்களுக்காக உயிரையும் தியாகம் செய்யத் தயாராய் இருப்பவனே மனிதன்.
- கணவன் ஒரு தெய்வம் என்றால், மனைவியும் ஒரு தேவதைதான். அவள் அடிமை அல்லள், சம உரிமைகளைக் கொண்ட தோழியும், துணைவியு மாவாள்.

RangaRakes tamilnavarasam.com

- பெண்ணுக்குப் பலம் குறைவுதான். ஆனால் ஆன்ம பலமோ ஆணுக்கு இருப்பதை விடப் பெண்ணுக்குத்தான் அதிகம்.
- திருமணம் என்பது கட்டுப்பாடேயன்றி வேறன்று.
- வாழ்க்கை என்பது ஒரு கடமை.
- நேர்த்தியான வீட்டுக்கு இணையான பள்ளிக்கூடமே இல்லை. நேர்மையான பெற்றோர்களுக்கு இணையான ஆசிரியர்களும் இல்லை.
- நாம் உடல் உழைப்புக்குக் கௌரவம் கொடுக்க வேண்டும். உடல் உழைப்பு இழிவானதாகும் என்ற கருத்தை அகற்ற வேண்டும்.
- இஷ்டபூர்வமாகவும், மகிழ்ச்சியுடனும் செய்யும் வேலை ஒருநாளும் கஷ்டமாக இருக்காது.
- மனிதன் இயற்கை நெறியிலிருந்து தவறி நடக்கும்போது நோய் வருகிறது.
- ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒருவித உபயோகமும் கிடையாது.
- மன அமைதி பிரார்த்தனையினாலேயே உண்டாகும். அமைதி ஒன்றின் மூலமே ஒருவர் பிறருக்கு உதவ முடியும்.
- கருத்துக்களில் வேற்றுமை இருக்கலாம்; அது பகைமையாகாது. உலகத்தில் கருத்து வேற்றுமை இல்லாத இரண்டு மனிதர்களைக் காண்பதரிது.
- எப்போதுமே மௌனமாக இருந்தால் நல்லதுதான். ஆனால் அது அநுபவ சாத்தியமில்லை.



- ஊறும் நாவை அடக்க வேண்டுதல் சொற்பொழிவாள
கடன்.
- மௌனமாயிருக்கும் போதுதான் ஆன்மாவானது த
பாதையைத் தெளிவாகக் கண்டு கொள்ள முடிகிறது
- பூவுலகில் நாம் வாழும் வாழ்க்கை பெண்கள் அணியு
உடைந்து போகிற கண்ணாடி வளையல்கள் மாதி
நிலையற்றவை.
- உறுதியோ, நடத்தை முறையோ இல்லாத ஒருவ
சுக்கான் இல்லாத கப்பலைப் போன்ற ஒருவர்.
- மன அழுக்கு உடல் அழுக்கிலும் ஆபத்தானது.
- மார்க்கம் பரிசுத்தமாக இல்லாவிடில் லட்சியமு
பரிசுத்தமாக இருக்க முடியாது.
- எல்லோருமே தம் கடமைகளைப் பற்றி
கவலைப்படாமல் உரிமைகளுக்காகவே போராடு
தென்றால் ஒரே குழப்பமும் கலவரமும்தான் இருக்கு
- பணம் செலவழிப்பதை எல்லாம் எழுதி வை
செலவழித்தது அவசியந்தானா என்று சிந்தித்துப் பா
சிக்கனம் தானாக வந்துவிடும்.
- அறத்துக்கும் மறத்துக்கும் வித்தியாசம் காண
நின்று விடுமானால் வளர்ச்சியும் நின்றுவிடும்.
- தோல்வி, சோர்வை உண்டாக்க முடியா
சுத்தமாக்கவே முடியும்.
- தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டு, பிறருக்
உண்மையில் சேவை புரிவதால் கிடைக்கும் அதிகா
ஒருவனை உயர்த்தும்.

RangaRakes tamilnavarasam.com

- போராட்டம் இல்லாத வாழ்க்கை சப்பென்று இருக்கும்.
- நம்மிடம் நாகரிகமும், பண்பாடும், சுயராஜ்யமும் தேவைகளைப் பெருக்குவதால் வராது; தேவைகளைச் சுருக்குவதாலேயே வரும்.
- உங்கள் திறமையைப் புலப்படுத்த நீங்கள் செய்யும் நூறு சொற்பொழிவுகளைவிட உங்கள் நடத்தை ஒன்றே போதுமானது.
- அன்பு இருக்கும் இடத்தில் வாழ்வு இருக்கும். பகை அழிவில் கொண்டு விடும்.
- பிறருக்கு உதவி புரிவதனாலும், பிறருடைய உதவியை எதிர்பார்ப்பதனாலும், மனிதன் அடக்கத்தைப் பெறுகிறான்.
- தொண்டில் மிகச் சிறந்த, மிக உறுதியான தொண்டு உலகமெல்லாம் எதிர்த்தாலும் தனித்து நின்று செய்யும் தொண்டேயாகும்.
- நம்முள் ஒரு தெய்வீக சக்தி இருக்கிறது. நம் சிந்தனைகள், செயல்கள் அத்தனைக்கும் அது சாட்சியாக இருக்கிறது. அது நம்மைப் பாதுகாத்து மெய் நெறியில் செலுத்துகிறது என்ற உண்மையை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.
- வீரம் என்பது உடலின் தன்மையன்று. ஆன்மாவின் தன்மையாகும்.
- இரத்தத்தைக் கொண்டு கடிதம் எழுதுவதும், கையெழுத்துப் போடுவதும் அக்கிரமச் செயலேயன்றி வேறன்று.



- நாம் கடவுளுக்கு அஞ்சினால் மனிதர்களுக் அஞ்சுவதை நிறுத்தி விடுவோம்.
- தவறு செய்யாதவன் என்று தன்னை எவனு கூறிக்கொள்ள முடியாது.
- ஒவ்வொருவருடைய தேவைக்குத் தக்கபடி பூமியி போதுமான அளவு இருக்கிறது. ஒவ்வொருவரி பேராசைக்குத் தக்கபடி பூமியில் போதுமானவ இல்லை.
- அழுக்கை மறைத்து வைப்பதே மனித இயல்பு.
- அடிமைத்தனத்தால் உண்டாகும் தீய ஒழுக்கங்களுக அடிமையாய் இருக்குமட்டும் அடிமைத்தன போகாது.
- கொள்கை இல்லாத அரசியல்,
  மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்
  உழைப்பில்லாத ஊதியம்
  மனச்சாட்சி இல்லாத இன்பம்
  நாணயம் இல்லாத வியாபாரம்
  தியாகம் இல்லாத பிரார்த்தனை
  ஒழுக்கம் இல்லாத கல்வி - இவை
  சமூகத்தில் உள்ள ஏழு பாவங்கள்.
- அன்பும் உண்மையும் ஒரு நாணயத்தி இருபுறங்களாக இருக்கின்றன. உண்மையினாலு அன்பினாலும் உலகத்தையே வெற்றி கொள் முடியும்.

RangaRakes tamilnavarasam.com

- கோபப்படுவதற்கு தக்க காரணம் இருந்தபோதும் கோபப்படாதவனைத்தான் கோபத்தை விட்டவன் என்று கூறலாம்.
- கடவுளிடம் அடைக்கலம் புகுபவனே அச்சத்தை அறியாதவன்.
- உண்மையைச் சொல்வதற்காகத் தூக்கு மரம் ஏற வேண்டி வந்தாலும் தயாராக இருங்கள்.
- மனதார உறுதி கூறிவிட்டு மனதார மீறுகிறவன் ஆண்மகன் அல்லன். கள்ள நாணயம் செல்லாது. தண்டனைக்குரியது. அதுபோலவே உறுதி மீறுகிறவன் உபயோக மற்றவன், தண்டனைக்கு உரியவன்.
- சுதந்திரமானது அரசியல்; பொருளாதாரம், சன்மார்க்கம் மூன்றிலும் சுதந்திரம் தருவதாகவே இருக்க வேண்டும்.
- சுதந்திரமே வாழ்வுக்கான மூச்சு. அதைப் பெற எதையும் கொடுக்கலாம்.
- தேச பக்திக்கும் மத பக்திக்கும் முரண்பாடிருக்க நியாயமில்லை. இரண்டுக்கும் தேவையானவை நல்ல எண்ணமும் நல்ல நடத்தையுமே யாகும்.
- சர்வ ஜீவராசிகளிடத்திலும் நியாயமாக நடந்துகொள்ள நமக்குப் புத்தி தர வேண்டுமென்று தெய்வத்தைப் பிரார்த்திப்பதுதான் மேலான பிரார்த்தனையாகும்.
- கோழையாக வாழ்வதைக் காட்டிலும் போராடிச் சாவது எவ்வளவோ மேல்.
- புலன்களால் மட்டும் காணும் இதர பொருள் எதுவும் நிலைத்திராததால், நிலைத்திருக்க முடியாததால் கடவுள் மட்டிலுமே உண்மை.





- பக்தியும், நம்பிக்கையும் இல்லையேல் இந்த உலகம் ஒரு விநாடியில் ஒன்றுமில்லாமல் போகும்.
- இந்து மதம் பிற மதத்தவர்களை விலக்கும் மதமன்று. சகல தீர்க்கதரிசிகளையும் ஒன்றாகவே மதிக்கும். பிற மதத்தவர்களைச் சேர்க்க முயலுவதில்லை.
- மத சம்பந்தமில்லாத சன்மார்க்கம் மணல்மேல் கட்டிய வீடாகும். சன்மார்க்கமில்லாத மதம் சப்தம் போடவும் தலையை உடைக்க மட்டுமே உதவக்கூடிய வெறும் தாளமேயாகும்.
- எந்தச் சமயத்திலும் மரணம் பாக்கியம். ஆனால் கிட்டுவது சத்தியம் என்னும் தன் லட்சியத்திற்காக வீரனாய் உயிர் துறப்பது இரட்டிப்புப் பாக்கியம்.
- மனிதன் சதாகாலமும் மயங்கங்களுக்கு ஆளாகக் கூடியவனாக இருக்கிறான். ஆனால் அவற்றுக்கு ஆளாகாமல் எதிர்த்து நிற்பவனே ஆண்மகன்.
- மனிதன் சக்தியற்றவன். ஆண்டவன் அவனைத் தமக்குத் தகுந்த கருவியாக்கி அவர் விருப்பப்படி உபயோகிப்பாராக.
- மக்களுக்காக உயிரையும் தியாகம் செய்யத் தயாராய் இருப்பவனே மனிதன்.
- ஆண்டவனால் படைக்கப்பட்ட ஜீவராசிகளுள் மிகவும் உத்தமமானவள் பெண்.
- பெண்ணுரிமை என்னும் விஷயத்தில் நாம் மிகவும் பிடிவாதமாக இருக்க வேண்டும். புதல்விகளையும்,

புதல்வர்களையும் நாம் சம அந்தஸ்தோடு நடத்த வேண்டும்.

- மதத்தின் ஆணிவேர் கட்டுப்பாடு.
- பெண் குலத்தை அவமதிப்பவன் திருமணத்திற்கு வரதட்சிணை கேட்பவன்.
- அகிம்சை என்றால் மற்றவர்களின் நலனில் அக்கறை காட்டி அதைப் பாதுகாப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.
- விவேகமான முறையில் பயனுள்ள உடல் உழைப்பு இருந்தால் அதுதான் அறிவை வளர்ப்பதற்கு மிகச் சிறந்த வழி.
- மனச்சான்றின் சிறு குரலை அடக்க எண்ணினால் அந்தக் கணமே வாழ்வு பயனற்றதாக ஆகிவிடும்.
- கஷ்ட காலத்தில்தான் நமக்குக் கடவுளின் நினைவு வருகிறது.
- பாவங்கள் எல்லாம் ரகசியமாகச் செய்யப்பெறுகின்றன.

RangaRakes tamilnavarasam.com